# சாதிய, சதிகார அரசியலுக்கு சம்மட்டி அடி தாரீர்!

விக்கிரவாண்டி இடைத் தேர்தலுக்கான நாட்கள் நெருங்கிக் கொண்டிருக்கின்றன. கழக மற்றும் கூட்டணித் தோழர்கள் மிகமிக எச்சரிக்கை உணர்வோடு அணுகிட வேண்டிய களம் இது!

இந்தத் தேர்தலில் பிரதான எதிர்க் கட்சியான அ.தி.மு.க. போட்டியிட வில்லை என்பதால் வெற்றி எளிதானது என்ற எண்ணம் நம்மில் பலருக்கு இருக்கலாம்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது அ.தி.மு.க., பா.ஜ.க.வுடனான கூட்டணியை முறித்துக்கொண்டதாக நாடகமாடியது. உண்மையில் பா.ஜ.க., அ.தி.மு.க.விடையே கள்ள உறவு இருந்தது என்பதை கழகத் தலைவர் தளபதியும், மற்றைய தோழமைக் கட்சித் தலைவர்களும் சுட்டிக்காட்டினர். அதனை எடப்பாடி வகையறாக்கள் மேம்போக்காக மறுத்த நிலையில், பா.ஜ.க. தரப்பில் அப்போதே வலுவான மறுப்பு எதுவும் தரப்படவில்லை.



**பா.ஜ.க. - அ.தி.மு.க. உறவு முறிந்து விட்டதாகக் கூறிய போதும் மோடி, அமித்ஷா போன்றோர் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆட்சிகளைப் புகழ்ந்து பேசிச் சென்றனர். எங்கும் எடப்பாடிக்கோ - அ.தி.மு.க. வுக்கோ எதிராக பா.ஜ.க.வால் எந்த எதிர்ப்பும் தெரிவிக்கப்படவில்லை. அப்போதே அ.தி.மு.க.வுக்கும், பி.ஜே.பி.க்கும் இடையே ஒரு எழுதப்படாத திரை மறைவு ஒப்பந்தம் உருவானது வெளிப்பட்டது.**

தேர்தலில் தி.மு.கழக அணியைத் தோற்கடிக்க வேண்டுமானால் – சிறுபான்மை மக்களின் வாக்குகளைப் பிரித்திட வேண்டும். அதற்கு ஒரே வழி - பி.ஜே.பி.யுடனான தங்களது கூட்டை உடைத்துக் கொள்வதாக அறிவிப்பது தான் என்று பி.ஜே.பி. தலைமைக்குத் தெரிவித்து அவர்களின் அனுமதியை பெற்ற பின்னரே அ.தி.மு.க.வின் அறிவிப்பே வெளிவந்ததாகக் கூறப்பட்டது.

இன்னும் ஒருபடி மேலேபோய் தேர்தலின் போது, பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டணி அமைந்திருந்தால், அதில் பா.ஜ.க. போட்டியிட ஒதுக்கிடும் தொகுதிகளில், அ.தி.மு.க. நேரடியாக போட்டியிட வேண்டிய நிர்ப்பந்தம் உருவானாலும் அங்கு அ.தி.மு.க. நேரடியாக இல்லாமல் மறைமுகமாக பி.ஜே.பி. வேட்பாளருக்கு வாக்களிக்க ஏற்பாடு செய்யப்படும் என்ற அளவிலும்; அ.தி.மு.க. - பி.ஜே.பி. யிடையே ரகசிய உடன்பாடும் ஏற்பட்டதாகவும் ஒரு சாராரால் கருதப்பட்டது.

இதனை அ.தி.மு.க. மறுக்கலாம். பலர் கற்பனைக் கதை என்று கூறக் கூடும். ஆனால் அப்படி நடந்திருக்கிறது என்பதை உறுதிசெய்யும் வகையில் தேர்தலுக்கு முன் நடந்த நிகழ்வுகளும், தேர்தலுக்குப் பின் வந்த முடிவுகளும் உறுதிப்படுத்துகின்றன.



**சிலந்தி**

**அ.தி.மு.க. - பா.ஜ.க.வுடனான உறவை முறித்துக் கொள்வதாக அறிவித்தபின் அன்றைய மோடி அரசு அ.தி.மு.க. தலைவர்களை நேரடியாகவோ மறைமுகமாகவோ மிரட்டிடும் வேலைகளில் எதுவும் ஈடுபட வில்லை. பல மாநிலங்களில் அமலாக்கத்துறை, சி.பி.ஐ. போன்றவற்றை வைத்து நடத்திய மிரட்டல் வேலைகள் எதையும் தங்கள் கூட்டணியிலிருந்து விலகிய அ.தி.மு.க.வின் பேரில் செய்திட வில்லை... அ.தி.மு.க. தலைவர்களும் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் மோடி அரசு குறித்து வாயைத்திறக்க வில்லை. அப்போதே பி.ஜே.பி. - அ.தி.மு.க.விடையே இருந்த மறைமுக ஒப்பந்தம் இலைமறைவு காய் மறைவாகத் தோன்றத் தொடங்கியது.**

தேர்தல் முடிவுகள் வந்த பின்னே அது வெட்ட வெளிச்சமாகியது. ஒருவேளை தேர்தலுக்குமுன் பி.ஜே.பி. - அ.தி.மு.க. இடையே தேர்தல் ஒப்பந்தம் ஏற்பட்டிருந்தால் எந்தெந்தத் தொகுதிகளை பி.ஜே.பி. தங்களுக்கு ஒதுக்கிடக் கேட்டிருக்குமோ அந்தத் தொகுதிகளில் பி.ஜே.பி. அணியின் வாக்கு சதவீதம் உயர்ந்திருப்பதும், பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க. அதில் சில தொகுதிகளில் மூன்றாம் இடத்துக்கும், சில தொகுதிகளில் டெபாசிட்டும் இழந்துள்ளது, பா.ஜ.க. மற்றும் அ.தி.மு.க. இடையே இருந்த கள்ள உறவை இது வெளிப்படையாகவே தெளிவாக்கியது!

தென் சென்னை, கன்னியாகுமரி, வேலூர், புதுச்சேரி, தேனி, தூத்துக்குடி, நெல்லை ஆகிய தொகுதிகளில் அ.தி.மு.க. தங்களது ‘டெபாசிட்’ பறிபோனாலும் பரவாயில்லை என்ற நோக்கில் பி.ஜே.பி. அணிக்குத் தனது வாக்குகளை மடைமாற்றம் செய்துள்ளது தெள்ளத்தெளிவாகவே தெரிந்தது. பி.ஜே.பி.யின் முக்கியஸ்தர்கள் நின்ற தொகுதிகளில், தான் மூன்றாம் இடத்துக்குப் போனாலும் பரவாயில்லை என்ற போக்கில் அ.தி.மு.க. வாக்குகளை பி.ஜே.பி. அணிக்குத் தாரை வார்த்து தனது எஜமான விசுவாசத்தைக் காட்டிக் கொண்டது எடப்பாடி கூட்டம்.

இந்த நிலையில்தான் விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தல் வந்துள்ளது.

விக்கிரவாண்டி இடைத்தேர்தலை அ.தி.மு.க. புறக்கணிக்கிறது – என பிரதான எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி அறிவித்தார்! இந்த நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. அணியிலிருந்த வி.சி.க. போட்டியிட்ட விழுப்புரம் நாடாளுமன்றத் தொகுதியில் உள்ளடங்கியது விக்கிரவாண்டி.

இப்போது இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்ட விக்கிரவாண்டியில் தி.மு.கழக கூட்டணியில் போட்டியிட்ட விடுதலைச் சிறுத்தைகள் 72,188 வாக்குகளைப் பெற்றிருந்தது. அ.தி.மு.க. வேட்பாளர் 65,825 வாக்குகள் பெற்று அடுத்த இடத்தையும், பா.ஜ.க. அணியில் போட்டியிட்ட பா.ம.க. 32,198 வாக்குகள் மட்டுமே பெற்று மூன்றாவது இடத்தில் இருந்தது.

மேலும் இதற்குமுன் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் – இடைத்தேர்தல் போன்றவற்றில் விக்கிரவாண்டி தொகுதியில் அ.தி.மு.க. வெற்றி பெற்ற வரலாறுகளும் உண்டு. இந்தச் சூழலில் அ.தி.மு.க. போட்டியிடவில்லை என்று ஒதுங்கியுள்ளது! அங்கே பா.ம.க. போட்டியிடும் என்று பா.ஜ.க. அறிவித்து பதுங்குகிறது! ஒன்றிய அமைச்சர் கனவில் இருக்கும் அன்புமணி பா.ஜ.க.வின் கட்டளையை ஏற்று ‘இடைத் தேர்தலில் பா.ம.க. போட்டியிடும்’ என அறிவித்தார்.

அ.தி.மு.க.வின் முன்னாள் அமைச்சரும், சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத் தலைவருமான உதயகுமார்; அ.தி.மு.க. போட்டியிடாது ஒதுங்கிக் கொண்டதில் ராஜதந்திரம் இருப்பதாக கூறியுள்ளார்!

**உண்மைதான் ; பா.ம.க.வை நிறுத்தி பா.ஜ.க. நேரடியாகவும், பழனிச் சாமி வழக்கம்போல பின்னாலிருந்தும் ஆதரிப்பது – என்ற திட்டமிட்ட சதியைத்தான் ‘ராஜதந்திரம்’ என்று அவர் கூறியுள்ளார். பழனிச்சாமி பதவிக்காக எந்தவித கழுத்தறுப்பு, கால் கை பிடிப்பு வேலைகளையும் செய்யத் தயங்காதவர்! பன்னீரை இறக்க தரையிலே தவழ்ந்து சின்னம்மாவின் காலைப் பிடித்தவர்; பின்னர் பன்னீரை வைத்து சின்னம்மாவின் குடும்பத்தையே அ.தி.மு.க.வை விட்டு வெளியேற்றினார். ஜெயலலிதா இருந்த காலத்திலேயே அ.தி.மு.க.வின் அதிகார மையமாக செயல்பட்ட சசிகலாவை தனது சாதுர்யநடவடிக்கையால் செல்லாக் காசாக்கி விட்டார் எடப்பாடி!**

**முதலமைச்சராக தானே வர வேண்டும் என்று போராடிய பன்னீர் செல்வத்தை, சசிகலா காலில் விழுந்து ஓரம் கட்டினார். சசிகலா தயவால் முதலமைச்சராகி கட்சியை வளைத்த பின்னர், தன்னை முதலமைச்சர் ஆக்காத சசிகலாமீது கோபமாக இருந்த பன்னீர்செல்வத்தைப் பயன்படுத்திக் கொண்டு சசிகலா வகையறாக்களையே கட்சியிலிருந்து வெளியேற்றினார். அடுத்து எந்தப் பன்னீர்செல்வத்தை பயன்படுத்தி சசிகலா கூட்டத்தை அரசியல் அநாதைகளாக்கினாரோ, அதே பன்னீர்செல்வத்தைப் பின்னர் கட்சியிலிருந்து தூக்கி எறிந்து அவருக்கிருந்த அரசியல் விலாசத்தையே அழித்துவிட்டார்.**

இந்தப் பழைய கதைகளுக்கும் – விக்கிரவாண்டி இடைத் தேர்தலுக்கும் என்ன சம்பந்தம் என்ற எண்ணம் எழலாம்!

ஆம்; எடப்பாடியின் அ.தி.மு.க.வும் பா.ஜ.க.வும், பா.ம.க.வும், சேர்ந்து எடுத்த முடிவுதான்; ‘அ.தி.மு.க. போட்டியிடுவதில்லை’ என்பதும் பா.ஜ.க. பா.ம.க.வுக்கு விட்டுக் கொடுத்ததும் ஆகும்! ‘பூனைக்குட்டி வெளியே வந்துவிட்டது’ என்பதுபோல, இப்போது அ.தி.மு.க. சார்பில் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி துணைத் தலைவராக இருப்பவர், ‘எடப்பாடி எடுத்த முடிவு ராஜதந்திரம்’ என்கிறார். அடுத்த நாளே அன்புமணி பா.ம.க. வேட்பாளருக்கு அ.தி.மு.க. ஓட்டளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறார். இந்த நிலையில் அ.தி.மு.க. என்ன செய்யப் போகிறது?

பா.ஜ.க. அணியிலுள்ள பா.ம.க.வுக்கு வாக்களிக்க முடிவெடுத்து மறைமுகமாகச் செயல்படும் என்பதில் யாருக்கும் சந்தேகம் எழத் தேவையில்லை. அ.தி.மு.க.வின் குடுமி பா.ஜ.க.வின் கையில் உள்ளது! இந்த நிலையில் வெளிப்படையாக இல்லாவிடினும் மறைமுகமாக, கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் செயல்பட்டதுபோல அ.தி.மு.க. செயல்படும்! செயல்படத் தயங்கினாலும் பா.ஜ.க. மிரட்டி அ.தி.மு.க.வை செயல்பட வைக்கும்!



**இந்தச் சூழலில் விக்கிரவாண்டி இடைத் தேர்தலை இலகுவாகச் சந்தித்து வெற்றி கண்டு விடலாம் என்று எண்ணிடாமல் நாம் உழைத்திட வேண்டும்! வெற்றியை மட்டும் நமது இலக்காகக் கொள்ளாமல் ‘ராஜதந்திரம்’ என்ற பெயரில் நடத்தப்படும் துரோக அரசியல், சாதிய அரசியல் நடத்தி தங்கள் வாழ்வை வளமாக்கிடத் துடிக்கும் சதிகார அரசியல் இவைகளுக்கு முடிவு கட்டிடும் தேர்தலாக இந்த விக்கிரவாண்டி இடைத் தேர்தல் அமைந்திடவேண்டும்!**

**இதனை ஒரு அறைகூவலாக ஏற்றுப் பணியாற்ற வேண்டும். கழகத்தின் வெற்றி, சாதிய அரசியலுக்குத் தரும் சம்மட்டி அடியாக அமைந்திட; சூதுமதி அரசியல்வாதிகளை எச்சில் இலைகளாகப் பறக்கவிடும்; சூறைக் காற்றாக விளங்கிடும் வகையில்,**

**கழகக் கண்மணிகளே... தோழமைக் கட்சியின் தொண்டர்களே... பணியாற்றிடுங்கள்!**

**வெற்றி நமதே!**